## குளித்தலை நகராட்சி

2022ஆம் வருடம் ஜுன் மாதம் 29ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

——————

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல்–2022 மற்றும் மே–2022.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல்–2022 மற்றும் மே–2022.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. **நகர்மன்றத் தலைவர் திருமதி.P.சகுந்தலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்–**

குளித்தலை நகராட்சிப் பகுதியான ஜெய்மகால் அவென்யூ தெருவில் நுண்உரக்கிடங்கு மையம் (MCC) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நுண்உரக்கிடங்கினால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், அதனை வேறு மாற்றக்கோரி அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை அளித்து வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன்கருதி, மேற்கண்ட உரக்கிடங்கினை அருகாமையில் உள்ள பழைய உரக்கிடங்கு பகுதிக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் முடிவு செய்யலாம்.
(ந.க.எண்.976/2022/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ஆம் ஆண்டில் பரிந்துரை செய்த பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளார்கள். இப்பணியை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு காலதாமதத்தை தவிர்க்கும் விதமாக உடனடியாக ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக் கழகம் குளித்தலை பணிமனையில் கான்கிரீட் தளம் அமைத்தல் (750 சதுர மீட்டர்) | ரூ. 10.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.296/2022/இ1)

*******

<u>குளித்தலை நகராட்சி</u>

**குளித்தலை நகர்மன்றத்தின் 29.06.2022ஆம் தேதிய அவசரக் கூட்டத்தின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 52 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 53 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 54 | பெரியார்நகரில் உள்ள பழைய உரக்கிடங்கில் உள்ள தரம் பிரிக்கும் இடத்திற்கே மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 55 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.